1991 ஜூலை 9]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 227 ஆவது விதியின் கீழ், 1991-92 ஆம் நிதியாண்டிற்குரிய உரிமைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினான்கு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும் ''.

மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

2. அறிவிப்புகள்.

(அ) பேரவைக் குழுக்களுக்கு உறுப்பினர்கள்—தேர்தல் கால அட்டவணை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

பேரவைக் குழுக்களுக்கான தேர்தல். ஒற்றை வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்குப் பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின்படி மதிப்பீட்டுக் குழு, பொதுக் கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் குழு, உரிமைக் குழு ஆகியவற்றுக்கு, உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேட்பாளர்கள் வேட்புத் தாளை 1991 ஜூலைத் திங்கள் 11 ஆம் நாள் வியாழக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். வேட்புத் தாளை செயலரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். வேட்புத் தாள்கள் 1991 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 11 ஆம் நாள் வியாழக்கிழமை மாலை 5-00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 1991 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 12 ஆம் நாள் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்குள் விலகிக் கொள்ளலாம். நியமனம் செய்யப்படும் வேட்பாளர்கள் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

அடுத்து டாக்டர் தே. குமாரதாஸ் அவர்கள்.